# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109774

1. District : Kanchipuram மாவட்டம் PS: VPAC, Kanchipuram காவல்நிலையம் Year: 2023 ஆண்டு FIR No.: 2/AC/2023/KM மு.த.அ. எண் Date: 13.03.2023 at 09.30hrs. நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: u/s 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.02.2023 at about 11.30hrs Date to : நாள் வரை 09.03.2023 at about 17.30hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.03.2023 Time : நேரம் 08.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.03.2023 Time : நேரம் at 08.00hrs & 09.30hrs

Seeing [signature] 13/3/23

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written complaint

Seeing [signature] 13/3/23

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South-West, about 7KMS,
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Ayyangarkulam Panchayat office, Ayyangarkulam, Kanchipuram Taluk & District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. G. Krishnamurthy. (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் S/o S.R. Ganapathy,
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-48 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Sales man in TASMAC shop. (g) Address : முகவரி No.26, Pandavaperumal koil Vadakku Mada veedi, Kanchipuram & District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Venda, Panchayat President, Ayyankarkulam Panchayat, Kanchipuram Taluk & District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—



[PTO]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded RS.15,000/- as bribe

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Nil —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Nil —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached here with.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

x G. Krishnamoorthy 13.03.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 13/3/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.03.2023 at 12.20hrs.

Name: பெயர் G. Annadurai
Rank: நிலை Inspector of Police, No. எண் ......
Vigilance & Anti-corruption Kanchipuram.
13.03.2023.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

**பணிந்து அனுப்பப்படுகிறது**

இன்று 13.03.2023-ந் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருந்தபோது, காஞ்சிபுரம் மாவட்டம், பாண்டவ பெருமாள் கோயில் வடக்கு மாட வீதி, எண்.26 என்ற முகவரியில் குடியிருக்கும் திரு.G.கிருஷ்ணமூர்த்தி, வயது-48, த/பெ.S.R.கணபதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் விவரம் பின்வருமாறு - அனுப்புநர், திரு.G.கிருஷ்ணமூர்த்தி, வயது-48, த/பெ. S.R.கணபதி, எண்.26, பாண்டவ பெருமாள் கோயில் வடக்கு மாட வீதி, காஞ்சிபுரம் மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அய்யா, நான் காஞ்சிபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் உள்ள TASMAC மதுபான கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் காஞ்சிபுரம், அய்யங்கார்குளம் பஞ்சாயத்தில், "அங்கமுத்து அம்பாள் நகர்" சர்வே எண்.140/24-ல் மனை எண்.236, 1800 சதுரடி பரப்பளவு கொண்ட வீட்டுமனையை வாங்கி, எனது பெயரில் பட்டா எண்.597 உள்ளது. மேற்படி நான் வாங்கிய காலி மனைக்கு அரசு அங்கீகாரம் பெறவேண்டியும், அதில் வீடு கட்டுவதற்காக காஞ்சிபுரத்தை சேர்ந்த திரு.ரவிச்சந்திரன் என்பவரிடம் கட்டிட வரைபடத்துடன் காஞ்சிபுரம் BDO அலுவலகத்தில் மனு செய்திருந்தேன், அதற்கு நான் அரசுக்கு செலுத்தவேண்டிய மனை வரன்முறைபடுத்துதல் கட்டணம் ரூ.7,515/-ஐ சலான் மூலமாக காஞ்சிபுரம் SBI பேங்கிலும் மற்றும் பஞ்சாயத்திற்கு செலுத்தவேண்டிய வளர்ச்சி கட்டணம் ரூ.4,175/-ஐ அய்யங்கார்குளம் பஞ்சாயத்தில் கடந்த 08.10.2021-ம்தேதி செலுத்தியும் ரசீது பெற்றேன். மேற்படி அனுமதி தொடர்பாக காஞ்சிபுரம் BDO அலுவலகத்திற்கு பலமுறை சென்று கேட்டதற்கு, அப்போது பஞ்சாயத்து தேர்தல் வந்ததால், என் மனுவை கிடப்பில் வைத்துவிட்டனர். பின்னர் குடும்ப சூழ்நிலை கருதி மேற்படி மனையில் வீடு கட்டி விட்டேன். இதற்கான வீட்டுவரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தி ரசீது பெற்றேன். மேலும், மேற்படி வீட்டிற்கு முதல் மாடி கட்ட வேண்டி வங்கியின் மூலம் லோன் பெறச்சென்றபோது, அவர்கள் மேற்படி வீட்டுமனையினை வரன்முறைப்படுத்தியும், வீட்டிற்கு கட்டிட அனுமதி பெற்றும் வாங்கி வரும்படி தெரிவித்தனர். பிறகு நான் மீண்டும் காஞ்சிபுரம் BDO அலுவலகத்திற்கு சென்று ஏற்கனவே நான் கொடுத்த நிலுவையில் உள்ள மனு சம்மந்தமாக விசாரித்தேன். அப்போது காஞ்சிபுரம் BDO அவர்கள், என் வீட்டு மனைக்கு மட்டும் வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்கியும், கட்டிட அனுமதி வேண்டி கொடுத்த

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

மனுவானது அய்யங்கார்குளம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டதாகவும், அங்கு சென்று பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். அதன்படி நான் அய்யங்கார்குளம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று, அங்கு பணிபுரியும் பஞ்சாயத்து கிளர்க் திருமதி.புவனா அவர்களை சந்தித்து நிலுவையில் உள்ள எனது கட்டிட அனுமதி மனு தொடர்பாக கேட்டபோது, உனது கட்டிட அனுமதி கோப்பு அலுவலகத்தில்தான் உள்ளது என்றும், இது சம்மந்தமாக பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா, அவர்களை சந்திக்குமாறு தெரிவித்தார். நான் கட்டிட அனுமதி வேண்டி பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா அவர்களை பலமுறை சந்தித்து கேட்டபோது, அவர் பதில் ஏதும் தெரிவிக்காமல், காலம் தாழ்த்தி வந்தார், பின்னர் நான் கடந்த 22.02.2023-ம்தேதி காலை சுமார் 11.30 மணிக்கு அய்யங்கார்குளம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று, பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா, அவர்களை சந்தித்து எனது கட்டிட அனுமதி நிலுவை சம்மந்தமாக கேட்டேன், அப்போது திருமதி.வேண்டா அவர்கள், அலுவலகத்திலிருந்த எனது மனு கோப்பை வாங்கி பார்த்துவிட்டு, ஏற்கனவே நீங்கள் அனுமதியின்றி வீடு கட்டியுள்ளீர்கள் எனவே உங்கள் மனுவின்மீது நடவடிக்கை எடுத்து, கட்டிட அனுமதி வழங்குவதற்காக, உங்களுக்கு பஞ்சாயத்திலிருந்து, நோட்டீஸ் கொடுப்போம் என்றும், அதற்கு நீங்கள் பஞ்சாயத்திற்கு செலுத்தவேண்டிய அரசு கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் மற்றும் எனக்கு பணம் ரூ.15,000/- தனியாக கொடுக்கவேண்டும் என்றும், அப்படி கொடுத்தால்தான் கட்டிட அனுமதி மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் குறித்து விவரம் தெரிவிப்பேன் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் தர இயலாது என்று தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் கடந்த 09.03.2023-ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் எனது செல்போனிலிருந்து அய்யங்கார்குளம் பஞ்சாயத்து கிளர்க் திருமதி.புவனா அவர்களின் செல்போனுக்கு தொடர்புகொண்டு, எனது வீட்டின் கட்டிட அனுமதி சம்மந்தமாக கேட்டேன், அதற்கு அவர், பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா அவர்களிடமே கேட்டுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்து, பஞ்சாயத்து தலைவியின் செல்போன் நம்பர் கொடுத்தார், நான் அன்றைய தினமே, மாலை சுமார் 17.30 மணிக்கு அய்யங்கார்குளம் பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா அவர்களின் செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு, நிலுவையிலுள்ள எனது வீடு கட்டிட அனுமதி சம்மந்தமாக கேட்டேன், அதற்கு திருமதி.வேண்டா அவர்கள், நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.15,000/- ரெடி பண்ணிட்டீங்களா என்றும், அதனை தனியாக என்னிடம் கொடுக்கவேண்டும் என்றும், அதை தவிர்த்து கட்டிட அனுமதிக்கு பஞ்சாயத்திற்கு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

செலுத்தவேண்டிய கட்டணம் குறித்து பஞ்சாயத்து செயலாளரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்றும், நாளை (10.03.2023) பஞ்சாயத்து அலுவலகத்தில் மீட்டிங் உள்ளதால், வரும் திங்கள் கிழமை 13.03.2023 -ம்தேதி நான் கேட்ட பணம் ரூ.15,000/- தனியாகவும் மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய பஞ்சாயத்து கட்டணம் தனியாகவும் எடுத்துக்கொண்டு, பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வந்து தன்னை சந்திக்கும்படி தெரிவித்தார். பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா தெரிவித்தபடி மீண்டும் நான் பஞ்சாயத்து கிளர்க் திருமதி.புவனா அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு, பஞ்சாயத்து தலைவியிடம் பேசிவிட்டதாகவும், கட்டிட அனுமதி தொடர்பாக பஞ்சாயத்திற்கு செலுத்தவேண்டிய கட்டணம் குறித்து உங்களிடம் கேட்கும்படி தெரிவித்தாக அவரிடம் சொன்னேன், அதற்கு பஞ்சாயத்து கிளர்க் திருமதி.புவனா அவர்கள் நான் கட்டிய வீட்டின் அளவுகளை கேட்டு தெரிந்துகொண்டு, பஞ்சாயத்திற்கு கட்டணமாக சுமார் ரூ.17,000/- செலுத்தவேண்டியிருக்கும் என்று தெரிவித்தார். எனக்கு அய்யங்கார்குளம் பஞ்சாயத்து தலைவி வேண்டா அவர்கள், எனது வீட்டிற்கு கட்டிட அனுமதி வழங்குவதற்கு அரசு கட்டணத்தை தவிர்த்து, தனியாக அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-ஐ கொடுக்க விருப்பம் இல்லை. எனவே நான் இன்று 13.03.2023-ம் தேதி காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து, என்னிடம் கட்டிட அனுமதி தரவேண்டி லஞசப்பணம் ரூ.15,000/- கேட்ட அய்யங்கார்குளம் பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, அவர் கேட்ட லஞ்சப் பணம் ரூ.15,000/- மற்றும் அரசுக்கு செலுத்தவேண்டிய பஞ்சாயத்து கட்டணம் ரூ.17,000/- தனியாகவும் எடுத்துவந்து தங்களிடம் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். மேலும், அய்யங்கார்குளம் பஞ்சாயத்து தலைவி திருமதி.வேண்டா அவர்கள்மீது தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். SdXXX G.Krihsnanmoorthy. 13.03.2023.

**Honoured Madam,**

**The above complaint was received by me on 13.03.2023 at 08.00 hrs, after verifying the antecendents of the accused and credibility of the complainant. I have registered a case in Kanchipuram V&AC, Cr.No.2/AC/2023/KM u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 13.03.2023 at 09.30 hrs. The original FIR along with complaint of complainant sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpet. Copies send to Officers concerned and took-up the investigation.**

G.A. [signature] 13/3/2023

**(G.ANNADURAI)**
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Kanchipuram.